மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

# போரில் இசைக்கருவிகளின் ஆளுமை

**வி. அன்னபாக்கியம்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
எஸ்.எஃப்.ஆர். மகளிர் கல்லூரி, சிவகாசி

**முன்னுரை**

இசையை இசைப்பதற்கும் இசைக்கு மேலும் செறிவூட்டவும் பலவகை கருவிகள் சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. பழந்தமிழர் முரசு, பதலை, யாழ் மற்றும் பறை வகைகளாகிய துடி, ஆகுளி, கிணை, தடாரி, தண்ணுமை, முழவு போன்ற இசைக்கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இவற்றில் முரசு, தண்ணுமை, தடாரி, துடி, கிணை ஆகிய இசைக்கருவிகளைப் போரின்போது போர்க்களத்தில் பயன்படுத்தியுள்ளனர். இவை போர்க்களத்தில் இசைக்கப்படும்பொழுது போர்வீரர்களின் நரம்புகள் எ்குக் கம்பி போல் பலம் பெற்று எழச்செய்து, உதிரத்தைச் சூடேற்றி, அவர்கள் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஊக்கம் அளித்துள்ளன. சில கருவிகளை மன்னன் அறிவிக்கும் ஆணையை மக்களுக்குத் தெரிவிப்பதற்கும் மன்னனிடமிருந்து பரிசில் பெற அவர்களைப் பாடிப் புகழ்வதற்கும் பயன்படுத்தியுள்ளனர்.

**முரசு**

மன்னனுக்குரிய முக்கியமான சின்னங்களில் ஒன்று முரசாகும். இவை முரலுதலால் முரசு எனப்பட்டது. அரச கட்டளையொன்றை அறிவித்தற்கு அடிக்கப்படும் பெரும்பறை முரசு எனப்படும்.

முரசு என்பதற்கு, " ஒரு மேளம், அது அட்டமங்கலத்தொன்று, இராச சின்னத்துமொன்று, உத்திரட்டாதிருநாள், பல்லினீறு, பேரிகை, வாச்சியப்பொது "[1] எனத் தமிழ்மொழி அகராதி விளக்கம் தந்துள்ளது

மன்னன் இமிழ்குரல் முரசு மூன்றின் துணைகொண்டு நாட்டை ஆண்ட மரபினை,

"இமிழ்குரல் முரசம் மூன்றுடன் ஆளும்
தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே " (புறம்.58:12-13)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. அவைகளாவன: நீதி முரசு, கொடை முரசு, போர் முரசு [2] என்பன. இவற்றுள் நீதி முரசைச் "செம்மையின் சின்னம்" என்றும், கொடை முரசை "வண்மையின் சின்னம்" என்றும், போர் முரசை "ஆண்மையின் சின்னம்" என்றும் கூறுவர். இவற்றில் போர் முரசு குறிப்பிடத்தக்கதாகும்.

மண்ணைக் குத்திக் கிளரும் கூரிய கொம்பினையுடைய தலைமை சான்ற இரண்டு காளைகளைச் சண்டை இடச் செய்து வெற்றி கொண்ட காளையின் தோலை மயிர்சீவாது அவற்றைப் பகையரசருக்குரிய காவல் மரத்தின் அடிமரத்தில் திண்மையாக விசித்துக் கட்டுவர்.

"மண்கொள வரிந்த வெந்நுதி மருப்பின்
அண்ணல் நல்ஏறு இரண்டுஉடன் மடுத்து
வென்றதன் பச்சை சீவாது போர்த்த
திண்பிணி முரசம் இடைப்புலத்து இரங்க " (புறம்.288:1-4)

அவ்வாறு செய்யப்பட்ட முரசை எண்ணெய் நுரை போன்ற மென்மையான மலர் இருக்கையையுடைய கட்டிலில் இடுவர். மயிற்பீலியும் உழிஞைப்பூ மாலையும் கட்டி முரசினைப் பொலிவு பெறச் செய்வர்.

"மாசு அற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலிநெடும் பீலி ஒண்பொறி மணித்தார்
பொலங்குழை உழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை எண்ணெய்
நுழைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை " (புறம்.50:1-7)

என முரசிற்குக் குருதிப் பலியிடும் வழக்கமும் (புறம்.362:3) இருந்துள்ளது. இப்போர்முரசு முழக்கத்தில் (புறம்.366:1) பெரியது. இதனை ஆயுதங்கள் தாங்கிய போர்வீரர்கள் பாதுகாத்து (புறம்.3:3) நிற்பர். இம்முரசானது வாரால் இழுத்துக் (புறம்.36:12,63:7) கட்டப்பட்டிருக்கும். வில் போன்ற மாலை (புறம்.36:12) சூட்டப்பட்டிருக்கும். போருக்குச் செல்லும் பொழுது போர்முரசு முழங்கச் (புறம்.211:4-5) செல்வதுண்டு.

போர்க்களத்தில் முரசு ஒலிக்க வீரர்கள் போர் செய்வர். பகைவரை வென்றதன் அறிகுறியாக முரசத்தை (புறம்.60:10,112:4) முழக்குவர். போர்முரசின் முழக்கமானது பகைவர்களுக்கு அச்சத்தைத் தரக்கூடியதாகவும் பாம்புகளை இறக்கப் பண்ணுவதாகவும் இடி முழக்கம் போன்றதாகவும் (புறம்.17:39,197:5,350:4,394:8,126:19) இருக்கும்.

போரின்போது முரசு முழங்கப் படை சென்றதை,

" முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும் " (புறம்.35:4)

என்ற பாடலடி விளக்குகின்றது.

பகைவரின் போர் முரசைக் கைப்பற்றுவதே சிறந்த வெற்றி என்ற பழந்தமிழ் மன்னனின் கொள்கையைப் புறநானூற்றுப் பாடல்கள் புலப்படுத்துகின்றன.

"அரைசுபட அமர்உழக்கி
உரைசெல முரசுவெளவி " (புறம். 26:6-7)

எனப் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பகைவர் நாட்டை வென்று படைத்தலைவர்களைக் கொன்று அவர்களின் போர் முரசினைக் கைப்பற்றியுள்ளான். இவ்வாறாக மன்னனின் முக்கிய உறுப்பாகிய முரசு வலிமை வாய்ந்த காளையின் மயிர்சீவாத தோலால் செய்யப்பட்டு மாலை சூட்டப்பட்டு ஆயுதம் ஏந்திய வீரர்களால் காக்கப்பட்டுள்ளது. போரின் போது முரசு முழங்க தானை சென்றதுடன் பகைவரின் போர்முரசைக் கைப்பற்றுவதையே நோக்கமாகவும் கொண்டு மன்னன் போரிட்டுள்ளான். போரின் முடிவில் வெற்றியை அறிவிப்பதற்கும் முரசு முழங்கப்பட்டுள்ளது.

## முழவு

தோற்கருவிகளில் ஒன்று முழவாகும். முழவு என்பது பறைப்பொது. முழவானது வாரால் பிணித்துக் கட்டப்பட்டதை,

வார் உற்று
விசிபிணிக் கொண்ட மண்கனை முழவு " (புறம்.15:22-23)

" விசிகூடு முழவு " (புறம்.128:2)

என்ற பாடலடிகள் விளக்கி நிற்கின்றன.

புறநானூற்றில் முழவின் உருவமைப்பானது,

" முழா அரைப் போந்தை யரவாய் மாமடல் " (புறம்.375:4)

என பனைமரத்தின் அடிப்பாகத்தோடு உவமிக்கப்பட்டிருப்பதை அறிய முடிகின்றது. இம்முழவின் ஆற்றலினை, " மதனுடை முழவு " (புறம்.50:12) என புறநானூறு சிறப்பித்துள்ளது. பழந்தமிழர்கள் முழவை இன்ப நிகழ்விற்கும் துன்ப நிகழ்விற்கும் பயன்படுத்தி உள்ளதை,

" மணமுழா அமைமின் பண்யாழ் நிறுமின் " (புறம்.152:14)

என இன்ப நிகழ்விற்கும்,

"ஓரில் நெய்தல் கறங்க ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப " (புறம்.194:1-2)

..............................' தன்கொழுநன்
முழவுகண் துயிலாக் கடியுடை வியல்நகர்ச்

சிறுநனி தமியள் ஆயினும்

இன்னுயிர் நடுங்கும்தன் இளமைபுறங் கொடுத்தே " (புறம்.247:7-10)

என போரில் இறந்துபட்ட வீரனின் இறுதிச்சடங்காகிய துன்ப நிகழ்விற்கும் முழக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக முழவானது பனை மரத்தின் அடிப்பாகம் போன்றதாகவும் ஆற்றல் மிக்கதாகவும் திகழ்ந்துள்ளது. இன்ப நிகழ்விற்கு மட்டும் பயன்படாமல் போரில் மாண்ட வீரர்களின் இறுதிச் சடங்கின்போதும் முழவு இசைக்கப்பட்டுள்ளது.

**பறை**

பறை-சொல் பறைதல் - சொல்லுதல், அறிவித்தல் என்று பொருள்படும். பறை என்பதற்கு, " இறகு, ஒருவகை கருவி, சாதி, சொல், பறையென்னேவல், வாச்சியப்பொது, ஒருவகை நோன்பு "[3] எனத் தமிழ்மொழி அகராதி விளக்கம் தந்துள்ளது. முற்காலத்தில் அரசு அறிவிப்புகளை மக்களுக்குத் தெரியப்படுத்தப் பறையடிக்கும் வழக்கம் இருந்துள்ளது. ஒரு செய்தியைப் பலரிடத்தில் சொல்லிக் கொண்டு திரிவதைப் பறையடித்தல் என்றே நாட்டுப்புற மக்கள் கூறுகின்றனர். "

கடுமையான ஒலி எழுப்பும் தன்மையிலான பறையைக் கோடியர் இசைப்பர் என்பதை, "கடும்பறைக் கோடியர்"[4] என்று மலைபடுகடாம் கூறுகின்றது. இசைக்கு இன்றியமையாத நெருங்கிய தொடர்பு உடைய பறையினை,

"தெய்வம் உணாவே மாமரம் புள்பறை

செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கருஎன மொழிப "[5]

என தொல்காப்பியர் கருப்பொருள்களுள் ஒன்றாகக் கொண்டமை பண்டைத் தமிழரின் இசை அறிவுக்குச் சிறந்த சான்றாகும்.

மேலும் கரந்தைப் போரின் துறைகள் பற்றிக் கூறும் தொல்காப்பியர், "வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்து பறைதூங்க"[6] என வாட்போர் செய்து வென்றெழுந்த வீரனுக்கு மகிழ்ச்சியோடு பறை முழக்கி, நாடு கொடுத்துக் கொண்டாடும் தன்மையைக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாகத் தமிழர்கள் தோற்கருவிகள் செய்வதற்குப் பல விலங்குகளின் தோலைப் பயன்படுத்தி வந்துள்ளனர். பறையைப் பற்றி ஆராய்ந்த மு.வளர்மதி" விலங்கின் தோலால் பரப்பி மூடிப் போர்த்தப்பட்டு தோல் வார்களால் இறுக வலித்துக் கட்டப்பட்டது. மேற்பரப்பின் ஓரங்களில் துளையிட்டுத் தோல் போர்த்து தோலின் வாரால் இறுக வலித்துக் கட்டிய அமைப்பிற்குப் பறை "[7] என்று விளக்கம் தந்துள்ளார்.

பறை செய்வதற்குப் பொதுவாகப் பசுவின் தோலையே பயன்படுத்தியுள்ளனர். காரணம் பசுவின் தோல் சுருங்கி விரியும் தன்மையும் நெகிழ்வு தன்மையும் உடையதேயாகும்.

போருக்குச் செல்வதற்காகப் பறை ஓசையைக் கேட்டவுடன் தன் ஒரே மகனையும் வெண்பட்டுடுத்திப் போருக்கு அனுப்பும் செய்தியை,

"இன்றும் செருப்பறை கேட்டு, விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித்து உடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்க எனவிடுமே " (புறம்.279:7-11)

என்று ஒக்கூர் மாசாத்தியார் பாடியுள்ளார்.

இவ்வாறாகப் பறையானது வீரர்களைப் போர்க்கெழுமாறு அணி திரட்ட, போர்க்களத்தில் வீரர்களை ஊக்கப்படுத்த, மன்னன் செய்தியை மக்களுக்குத் தெரிவிக்க, திருமண வீட்டில், இறப்பு வீட்டில் என பல்வேறு இடங்களில் பண்டைத் தமிழர் வாழ்வியலில் பயன்பட்டுள்ளது.

**தண்ணுமை**

தோற்கருவிகளில் முதன்மையானதாகக் கருதப்படுவது தண்ணுமையாகும். இக்கால மத்தளம் என்பது தண்ணுமையைக் குறிக்கும்.

தண்ணுமை என்பதற்கு, "உடுக்கை, உறுமிமேளம், ஒருகட்பறை, பேரிகை, மத்தளம், தண்ணெனல், குளிர்தல், சீதக்குறிப்பு" [8] எனத் தமிழ்மொழி அகராதி விளக்கம் தந்துள்ளது.

தண்ணுமை இனிய குரலை உடையது: தோல் வாரால் நன்கு இழுத்து கட்டப்பெற்றது காற்று அதன்மீது மோதும் பொழுது தானே ஓசை உண்டாக்கும் தன்மையுடையது.

"பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின் " (புறம்.89:7-8)

போருக்கு வீரர்களை அழைப்பதற்கும் போர்க்களத்தில் வீரர்கள் தண்ணுமையின் முழக்கம் கேட்டு வீறுகொண்டு எழுந்து பகைவர்கள் அஞ்சும்படியாகப் போரிட்டுள்ளனர்.

"மறப்படை நுவலும் அரிக்குரல் தண்ணுமை
இன்னிசை கேட்ட துன்னரும் மறவர்
வென்றிதரு வேட்கையர் மன்றம் கொண்மார்
பேரம ருழந்த வெருவரு பறந்தலை " (புறம்.270:8-11)

என தண்ணுமையின் முழக்கம் கேட்டு வீரர்கள் வீறுகொண்டு போருக்கு எழுகின்றனர். போரில் வெற்றி பெறத் துடிக்கின்றனர்.

போர்க்களத்தில் போருக்குரிய பூக்களை வீரர்கள் பெற்றுக் கொள்வதற்காக தண்ணுமை முழக்கியுள்ளனர்.

"..........................................பாசறைப்
பூக்கோள் இன்று என்று அறையும்
மடிவாய்த் தண்ணுமை இழிசினன் குரலே? " (புறம்.289:8-10)

வெண்ணெல் கதிரினை அரிவதற்காக நெல்லரியும் உழவர்கள் தண்ணுமை கருவியைப் பயன்படுத்தியுள்ளனர்.

"வெண்ணெல் அரிஞர் தண்ணுமை வெரீஇக்
கண்மடற் கொண்ட தீம்தேன் இரியக் " (புறம்.348:1-2)

வெண்ணெல் அரியும் உழவர்கள் முழக்கிய தண்ணுமையின் ஓசையைக் கேட்டு மரத்தின் கணுக்களில் உள்ள தேனீக்கள் அஞ்சி அவ்விடம்விட்டு அகன்றபோது, குயவர்கள் அதன் தேனை எடுத்துள்ளனர். தண்ணுமை என்னும் தோற்கருவியானது வீரர்களைப் போருக்கு அழைப்பதற்கும் போருக்குரிய பூக்களை வீரர்கள் பெற்றுக்கொள்ள அழைப்பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் ஓசையானது கேட்பதற்கு இனிமையாகவும், வீரர்களுக்கு வேகத்தையும், பகைவர்களுக்கு அச்ச உணர்வையும் கொடுக்கக்கூடியதாக இருந்துள்ளது. வெண்ணெல் அறுக்கும் உழவர்களும் இதனைப் பயன்படுத்தியுள்ளனர்.

**கிணை**

பறை வகைகள் ஒன்று கிணைப்பறை. இதுவும் தோற்கருவியாகும். கிணை என்ற கருவியை இசைப்போர் கிணைவர், கிணைப்பறையாளர், பொருநன் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றனர். கிணைப்பறை அழகிய கண்ணை உடையது. ஆமையின் வயிற்றைப் போன்று வண்மையானது. இனிய ஓசை குறையாத முறையில் பாட ஏற்றது.

கிணைப்பறையின் வடிவம், இசை, செயல்பாடு இவற்றின் அடிப்படையில் தெண்கண் மாக்கிணை (புறம்.70:3,374:6,382:18,387:4,397:10), அங்கண் மாக்கிணை (புறம்.373:31), சிறுகிணை (புறம்.376:23), நுண்கோல் சிறுகிணை (புறம்.383:3) ஒருகண் மாக்கிணை (புறம்.392:5,394:7), மதிபுரை மாக்கிணை (புறம்.393:20) தெண்கிணை (புறம்.78:12,79:3) எனப் பலவாறாகப் புறநானூற்றில் குறிக்கப்பட்டுள்ளன. கலைமான்கள் செவிசாய்த்துக் கேட்கும் அளவுக்கு இனிய ஓசை உடையது என்பதை,

"தெண்கண் மாக்கிணை தெளிர்ப்ப ஒற்றி
இருங்கலை ஓர்ப்ப இசைஇக் காண்வர " (புறம்.374:6-7)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

வீரர்கள் போருக்குப் புறப்படும்போதும், போரின்போதும் கிணைப்பறை முழக்கப்பட்டுள்ளது. போருக்குப் புறப்பட்டப் பாண்டியன் நெடுஞ்செழியன் வேப்பம்பூ மாலைச் சூடி கிணைப்பறைக்கு முன்பு களிறு கோல பெருமிதமாக நடந்து வந்தான் என்பதை,

"தெண்கிணை முன்னர்க் களிற்றின் இயலி " (புறம்.79:3)

என்ற பாடலடியும்,

பகைவரை அவர்களுக்கு உரிமையான ஊரிலே சென்று கிணைப்பறை முழங்க பாண்டியன் நெடுஞ்செழியன் அழித்தமையை,

"தெண்கிணை கறங்கச்சென்று ஆண்டுஅட் டனனே " (புறம்.78:12)

என்ற பாடலடியும் விளக்கி நிற்கின்றன.

பணிந்து திறை கொடாத பகைவரின் மதிலை அழிக்கும்போது கிணைப்பறை முழக்கியமையை,

"ஒருகண் மாக்கிணை ஒற்றுபு கொடாஅ

உருகெழு மன்னர் ஆர்எயில் கடந்து " (புறம்.392:5-6)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

மன்னனிடம் பரிசு பெறச் சென்ற இரவலர்களும் கிணைப்பறையைப் (புறம்.373:31,378:8,383:3,393:20) பயன்படுத்தியுள்ளனர்.

கிணைவரின் பாடலைக் கேட்டு எதிரிப்படைகள் அஞ்சி நடுங்குகின்றன என்பதை,

"பாடின் தெண்கிணைப் பாடுகேட் டஞ்சிய

போரடு தானை "[9]

என வரும் அகநானூற்று பாடலடிகள் இச்செய்தியை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

கிணைப்பறை தோலால் போர்த்தப்பட்டு வாரால் இழுத்துக் கட்டப்பட்டது, அதன் தெளிவான கண்ணில் அடித்து முழக்கப்படுவது, அதன் ஒலி இனிமையானது. மன்னன் போருக்குப் புறப்பட்டப் போதும், போரின்போதும், பகைவரின் மதிலை அழிக்கும்போதும் கிணைப்பறை முழக்கப்பட்டுள்ளது. பரிசிலர்கள் மன்னர்களைப் பாடிப் பரிசில் பெறவும் கிணைப்பறையை இசைத்துள்ளனர்.

**துடி**

பறை வகைகளுள் ஒன்று துடிப்பறை. உடுக்கு அல்லது உடுக்கையே துடி என்பது சிலரின் கருத்தாகும். இதனை இடை சுருங்கிய பறை, ஒருகட்பறை என்றும் அழைப்பர்.

துடி என்பதற்கு, "அகில், இசங்கு, உடுக்கை, உதடு, ஏலம், கால தசப்பிரமாணத்தொன்று, அது நிமிடமெட்டுக் கொண்டது, கால நுட்பம், குமரனாடல், குறிஞ்சிப்பறை, கூதாளிச் செடி, சத்தகன்னி கைகளாடல், துடியென்னேவல், பாலை நிலப்பறை மேன்மை, வலி"[10] எனத் தமிழ்மொழி அகராதி விளக்கம் தந்துள்ளது. துடிப்பறை முழக்கம் வீரர்களை வீறுகொண்டு எழச்செய்துள்ளது. அவர்கள் உள்ளுணர்வைத் தட்டி எழுப்பியுள்ளது.

"மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த

கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே " (தொல்.புறத்.1005)

என துடிப்பறை அடிக்க அடிக்க வீரர்கள் ஊக்கம் கொண்டு, அவர்கள் உள்ளே அடங்கி கிடக்கும் மறவுணர்வுகள் வெளிவரும். அதாவது வீரமிக்க எழுச்சியுடன் அவர்களைப் போர் செய்ய தூண்டும் என்று துடிப்பறையின் பயன்பாட்டினை விளக்கியுள்ளார்.

துடிப்பறையின் ஓசையானது ஆந்தையின் அலறலைப் போன்றது என்பதை

"........................வன்கட் கடுந்துடி

புலிதுஞ்சு நெடுவரைக் குடிஞையோடு இரட்டும் " (புறம்.170:6-7)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

துடிப்பறை கொட்டுபவன் துடியன் (புறம்.335:7), இழிப்பிறப்பாளன் (புறம்.170:5), புலையன் (புறம்.287:1) எனப் பலவாறாக அழைக்கப்பட்டுள்ளான்.

பகைவரின் ஆநிரைகளைக் கவர்ந்து வந்த வெட்சி வீரர்கள் கள்ளுண்டு களித்த போது துடிப்பறையை இயக்கியுள்ளனர்.

"ஒன்று இருமுறை இருந்துஉண்ட பின்றை
உவலைக் கண்ணித் துடியன் வந்தெனப் " (புறம்.269:5-6)

என்ற பாடலடிகளால் துடிப்பறை இசைப்பவன் பசுமையான தழை மாலைகளை அணிந்துள்ளமையையும் அறிய முடிகின்றது.

"துடியன் பாணன் பறையன் கடம்பனென்று
இந்நான்கு அல்லது குடியு மில்லை" (புறம்.335:7-8)

என மாங்குடிக்கிழார் பழந்தமிழ் சமூகத்தில் நான்கு குடிகளைத் தவிர பிற குடிகள் இல்லை என்று பாடியுள்ளார்.

இவ்வாறாகத் துடிப்பறையானது வீரர்களின் உள்ளுணர்வைத் தட்டி எழுப்பி, போர் செய்ய தூண்டியுள்ளது. வெட்சிப்போரில் ஆநிரைகளைக் கவர்ந்து வந்த வீரர்கள் கள்ளுண்டு களித்த போது இப்பறை முழக்கப்பட்டுள்ளது.

**தடாரி**

பறை வகைகளுள் ஒன்றான தடாரி தோலால் போர்த்தப்பட்டு வாரால் இறுக்கிக் கட்டப்பட்டிருப்பது. இனிய ஓசையைத் தரவல்லது.

தடாரி என்பதற்கு, "தடாரியென்னேவல், பம்பை, பேரிகை, மத்தளம், வாச்சியப்பொது"[11] எனத் தமிழ்மொழி அகராதி விளக்கம் தந்துள்ளது. இதனைக் கிணைப்பறை என்றும் அழைப்பர்.

தடாரிப்பறை மத யானையின் கால்தடம் போன்ற தெளிந்த அகன்ற கண்ணையும் (புறம்.368:14-15), சந்தனக்கட்டை போன்ற இறுக்கிக் கட்டிய புதுப் போர்வையால் மூடப்பெற்ற மெல்லிய ஓசையுடையதும் (புறம்.369:19-21), முழுமதி போன்றதும் வாரால் இறுக்கிக் கட்டப் பெற்றதுமான தன்மையுடையது (புறம்.371:17-18) எனத் தடாரிப்பறையின் அமைப்பு மற்றும் தன்மையினைப் புறநானூற்றுப் பாடலடிகள் விளக்குகின்றன போர்க்களத்தில் வீரர்கள் வீரத்தோடு போர் புரியத் தடாரிப்பறையைத் தட்டி ஒலி எழுப்பியுள்ளதை,

"அகன்கண் தடாரி தெளிர்ப்ப வொற்றி
வெந்திறல் வியன்களம் பொலிக்என்று ஏத்தி " (புறம்.370:18-19)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

இரவலர்கள் மன்னனிடம் பரிசில் பெற விரும்பி வரும் போதும் தடாரி பறையை இசைத்துள்ளனர் என்பதற்குப் புறநானூற்றில் (371:17, 372:1, 376:4, 381:12, 385:4,390:8)

பல பாடல்கள் சான்றளிக்கின்றன. கதிர்களைத் தின்னவரும் பறவைகளை ஓட்டுவதற்கு மெல்லிய ஓசையுடைய தடாரிப்பறையைப் பயன்படுத்தியுள்ளனர்.

"கதிர்நனி ..................................மாலைத்
தன்கடைத் தோன்றி என்உறவு இசைத்தலின்
தீம்குரல் .....கின் அரிக்குரல் தடாரியொடு
ஆங்குநின்ற எற்கண்டு " (புறம்.395:23-26)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. இவ்வாறாக தடாரிப்பறையைக் கிணைப்பறை என்றும் அழைப்பது வழக்கம். இப்பறையைப் போர்க்களத்தில் வீரர்களை உற்சாகப்படுத்துவதற்கு மட்டுமல்லாது, மன்னர்களைப் புகழ்ந்துப் பாடி பரிசில் பெறுவதற்கும், கதிர்களைத் தின்னவரும் பறவைகளைத் துரத்துவதற்கும் பயன்படுத்தியுள்ளனர் என்பது தெளிவு.

## தொகுப்புரை

புறநானூற்றுப் பாடல்களில் இடம்பெற்றுள்ள இசைக்கருவிகளாகிய முரசு, முழவு, தண்ணும்மை, கிணை, துடி, தடாரி ஆகியவற்றைப் போரின்போது பயன்படுத்தியுள்ளனர். இவற்றில் துடிப்பறை பற்றிய செய்தி மட்டுமே தொல்காப்பியப் புறத்திணையியலில் இடம் பெற்றுள்ளன. வீரர்கள் வீறுகொண்டு போர் புரிவதற்காகவும், பகைவர்கள் அஞ்சி ஓடும் படியாகவும் இக்கருவிகள் போர்க்களத்தில் இசைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பறை வகைகளாகிய தண்ணும்மை, கிணை, துடி, தடாரி போன்றவற்றைப் போர் அல்லாத பிற காரியங்களாகிய வீரர்களின் வெற்றிக் களிப்பின்போதும், மன்னர்களிடம் பரிசில் பெறுவதற்கும், விழுப்புண்பட்டு இறந்த வீரனின் இறுதிச் சடங்கிற்கும் (முழவு) பயன்படுத்தியுள்ளனர் என்பது தெரிய வருகின்றது.

## குறிப்புகள்

1. நா. கதிரைவேற்பிள்ளை, தமிழ்மொழி அகராதி, ப.1210.
2. புறநானூறு அகராதி, ப.185.
3. நா. கதிரைவேற்பிள்ளை, மு.நூ., ப. 983
4. மலைபடுகடாம் 236
5. தொல்.அகத்., நூ., 964
6. தொல்.புறத்., நூ., 5
7. மு. வளர்மதி, பறை, ப.24
8. நா. கதிரைவேற்பிள்ளை, மு.நூ., ப.734
9. அகம்., 226:15-16
10. நா. கதிரைவேற்பிள்ளை, மு.நூ., ப.810
11. மேலது.,